**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 110** **நாள்: 16.08.2016**

# டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட சுண்ணாம்பு கால்வாய் பி–கெனால் சாலையில் அம்மா வாரச்சந்தை அமையவுள்ள இடத்தை மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அவர்கள் ஆய்வு செய்தார்கள் !

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திரு.சைதை துரைசாமி அவர்கள் இன்று (16.08.2016) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு–41, ஆர்.கே.நகர் தொகுதிக்குட்பட்ட மணலி சாலை அருகில் உள்ள சுண்ணாம்பு கால்வாய் பி–கெனால் சாலையில் அம்மா வாரச்சந்தை அமைப்பதற்கான இடத்தினை ஆய்வு செய்தார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வடக்கு, மத்தியம் மற்றும் தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட இடங்களில் அம்மா வாரச்சந்தை அமைப்பதற்கு முதற்கட்டமாக 3 இடங்களில் இடம் தேர்வு செய்யப்பட்டு, முதலில் மண்டலம்–4, வார்டு–41, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் தொகுதிக்குட்பட்ட மணலி சாலை அருகில் உள்ள சுண்ணாம்பு கால்வாய் பி–கெனால் சாலையில் அம்மா வாரச்சந்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை அமையவுள்ள சுண்ணாம்பு கால்வாய் பி கெனால் சாலை மொத்தம் 935 மீட்டர் நீளத்திற்கு 20 மீட்டர் அகலம் உள்ள சாலையாக சரிசெய்யப்படும். அதில் முதல் 100 மீட்டரில் வாகனங்கள் நிறுத்த வசதியும், அடுத்த 500 மீட்டர் சாலையில் சுமார் 45 கடைகள் 20X20 டெண்ட் அமைக்கலாம் எனவும், கூடுதலாக 30X10 அகலம் உள்ள கடைகள் சாமியானா அமைத்து

அமர்ந்து விற்பனை செய்யலாம் எனவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வார சந்தையில் உணவு விற்பனை இடம், குழந்தைகள் விளையாட வசதிகள், கட்டுப்பாட்டு அறை, ஆம்புலன்ஸ், தீயணைப்பு வாகனம் மற்றும் மின்சார வசதிகளுடன் செயல்படும் என இந்த ஆய்வில் முடிவு செய்யப்பட்டது. இப்பணியானது ஓரிரு வாரங்களில் துவங்கப்படும்.

இந்நிகழ்வின்போது, ஆணையாளர் முனைவர். தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஜி.வெங்கடேஷ் பாபு, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.வெற்றிவேல், துணை ஆணையர் (பணிகள்) திரு.கே.எஸ். கந்தசாமி, இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையர் திரு.பிரவீண் பி. நாயர், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர்கள் திருமதி.ர.சசிரேகா, திரு.ஜே.கே.ரமேஷ், திருமதி.சு.அஞ்சலட்சுமி, திரு.ரா.மதுரை வீரன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**